# ஐம்பெரும் காப்பியங்கள்

## காப்பிய இலக்கியத் தகவல்கள்

**பொருட்** தொடர்நிலைச் செய்யுள் காப்பியம் எனப்படும். காப்பியம் என்பது காப்பை இயம்புவது என்ற பொருள் தரும் தமிழ்ச் சொல் என்பர். காவ்யம் என்ற வடசொல்லின் திரிபு என்பாரும் உளர்.

காப்பிய இலக்கணம் குறித்துக் கூறும் நூல் தண்டியலங்காரம் காப்பியம் பெருங்காப்பியம் சிறுகாப்பியம் என இரு வகைப்படும்.

அறம், பொருள், இன்பம், வீடு என்ற நாற்பொருளையும் கூறுவது பெருங்காப்பியம் எனப்படும். அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கில் ஒன்றோ பலவோ குறைந்து வருவது சிறுகாப்பியம் எனப்படும்.

சங்க இலக்கியங்கள் குறிப்பிடும் இராமாயணமும், பெருந்தேவனார் பாடிய பாரதமும், பின்தோன்றிய தகடூர் யாத்திரையும் காப்பியங்களாயினும் இன்று கிடைக்கவில்லை: பருப்பதம் கலியாணன் கதை, புராண சாகரமும் போன்ற பெயர்மட்டுமே தெரிந்த நூல்களும் காப்பியங்களாகும் என்பர் கி.வா.ஜ.

## ஐம்பெருங்காப்பியங்கள்

ஐம்பெருங்காப்பியங்கள் என்ற தொடரை முதன் முதலில் கூறியவர் மயிலைநாதர் (நன்னூல் 387 உரை)

ஐம்பெருங்காப்பியங்களின் நூற்பெயர்களை முதன்முதலாகக் குறிப்பிட்டவர் 19 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கந்தப்பதேசிகர் (திருத்தணிகைஉலா)

சிலப்பதிகாரம் - இளங்கோவடிகள்
மணிமேகலை – சீத்தலை சாத்தனார்
சீவக சிந்தாமணி – திருத்தக்க தேவர்
வளையாபதி – பெயர் தெரியவில்லை
குண்டலகேசி – நாதகுத்தனார்

சிலப்பதிகாரமும் மணிமேகலையும் இரட்டைக் காப்பியங்கள் ஆகும். சிலப்பதிகாரம், சீவகசிந்தாமணி, வளையாபதி என்ற மூன்று சமணக் காப்பியங்கள்.

மணிமேகலை, குண்டலகேசி என்ற இரண்டும் பௌத்த காப்பியங்கள். ஐஞ்சிறுகாப்பியங்கள் அனைத்தும் சமணக் காப்பியங்கள் ஆகும். குண்டலகேசிக்கு எதிராகச் செய்யப்பட்டது நீலகேசி. நீலகேசி ஐஞ்சிறு காப்பியத்துள் ஒன்று (காண்க ஐஞ்சிறு காப்பியங்கள்)

### 1.சிலப்பதிகாரம்

சிலம்பு + அதிகாரம் = சிலப்பதிகாரம். ஆசிரியர் இளங்கோவடிகள். காலம் 2 ஆம் நூற்றாண்டு. தாய் நற்சோணை, தந்தை இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன். இளங்கோவடிகள் சேரன் செங்குட்டுவனின் தம்பி.

இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனின் இளைய மகன். ஓர் சமணத் துறவி. வணிக குலத்தைச் சேர்ந்த துறவி என்பாரும் உண்டு. இயங்கோவடிகள் துறவ பூண்டு அமர்ந்த இடம் குணவாயில் கோட்டம் என்ற ஊர்
குணவாயிற் கோட்டம் சேர நாட்டு ஊர்.

மூன்று காண்டம்: முப்பது காதை. காதை – கதை பொதிந்துள்ள பாட்டு. புகார் காண்டம் மங்கல வாழ்த்துப் பாடல் முதல் நாடுகாண் காதை வரை உள்ள 10 காதைகள்.

மதுரைக் காண்டம்: காடுகாண் காதை முதல் கட்டுரைக் காதை வரை உள்ள 13 காதைகள். வஞ்சிக்காண்டம் குன்றக் குரவை முதல் வரந்தருகாதை வரை உள்ள 7 காதைகள். சிலப்பதிகாரம் ஆசிரியப்பாவாலும் கொச்சக் கலிப்பாவாலும் ஆனது.

FUTURE VISION

**முக்கிய காதை மாந்தர்கள்**

தலைவன் - கோவலன்
தலைவி – கண்ணகி (சங்க காலத்துக் கடையெழு வள்ளல்களில் ஒருவானான பேகனின் மனைவி பெயரும் கண்ணகி)
ஆடல் மங்கை - மாதவி
கோவலன் தந்தை மாசத்துவான்
கண்ணகியின் தந்தை மாநாய்கன்
மாதவியின் தாய் சித்திரதபதி
கோவலனுக்கும் மாதவிக்கும் பிறந்தவள் மணிமேகலை
கண்ணகியின் தோழி தேவந்தி (இவள் ஓர் அந்தணப் பெண் இவள் கணவன் பாசண்ட சாத்தன்)
மாதவி தோழி வயந்தமாலை
பெண் சமணத்துறவி கவுந்தியடிகள்
ஆண் பௌத்தத் துறவி அறவண அடிகள்
மதுரையில் கண்ணகியை அடைக்கலம் பெற்ற ஆயர்குலப் பெண் மாதரி
மாதரியின் மகள் ஐயை
கோவலனை ஏமாற்றியவன் பொற்கொல்லன்
மாதவியின் நலம்விரும்பிகோசிகாமணி (கௌசிகமாணி)
கோவலனின் நண்பன் மாடலன்
மதுரை செல்ல வழிகாட்டியவன் மாங்கோட்டு மறையோன்
கோசிகமாணி மாடலன், மாங்கோட்டு மறையோன் மூவரும் அந்தணர்கள்
மாதவியின் முதல் கடித்ததை எடுத்துச் சென்றவள் வயந்தமாலை மாதவியின் இரண்டாம் கடித்ததைக் கோவலனிடம் சேர்த்தவன் கோசிகமாணி.
மதுரையின் காவல் தெய்வம் மதுராபதி. கண்ணகிக்கு கோயில் கட்டியவன் செங்குட்டுவன் செங்குட்டுவனின் மனைவி வேண்மாள்.
கண்ணகிக்கு சிலை எடுக்கவேண்டும் என்று சென்னவள் வேண்மாள்.
சிலை எடுத்தபோது உடன் இருந்தவர்கள் இலங்கை மன்னனன் கயவாகு (கஜபாகு) சோழன்மன்னன் பெருநற்கிள்ளி, கனகவிசயர். கண்ணகி கோயிலின் முதல் பூசாரி தேவந்தி. முதன் பெண் பூசாரி தேவந்தி. செங்குட்டுவனின் அமைச்சர்கள் அழும்பில்வேள் வில்லவன் கோதை.

வடநாட்டுப் போரில் செங்குட்டுவனுக்க உதவியவர்கள் நூற்றுலர் கன்னர் (சதகர்ணிகள்)

செங்கட்டுவன் போர் செய்த இடம் குயிலாலுவம். கண்ணகி சிலைக்குக் கல் எடுத்த மலை இமயமலை. குல்லை நீராட்டிய ஆறு கங்கையாறு. கண்ணகிக்குக் கோயில் உள்ள ஊர் திருவாஞ்சிக்களம் (குமுளி)

**முற்பிறப்புச் செய்தி**

கலிங்கநாடு சிங்கபுரம் கலிங்கபுரம் என இரண்டாகப் பிரிந்தது. சிங்கபுரத்தை வசுவும் கலிங்கபுரத்தைக் குமரனும் ஆண்டனர் இருவரும் பகைப் பங்காளிகள். சிங்கபுரத்து வணிகன் சங்கமன். சங்கமன் மனைவி நீலி. சங்கமனை ஒற்றன் என்று அரசனுக்குக் காட்டிக் கொடுத்துக் கொன்றவன் பரதன். அப்பரதனே இப் பிறவிக் கோவலன். நீலியின் சாபத்தால் துன்பப் பட்டவள் கண்ணகி

**செய்திகள்**

சிலம்பின் குறிக்கோள் மூன்று. கோவலன் மாதவி பிரிவுக்குக் காரணம் ஊழ். கோலவன் மதுரை சென்றதுக்குக் காரணம் ஊழ். கோவலன் கொலையுண்டதற்குக் காரணம் ஊழ். மதுரை எரிந்ததற்குக் காரணம் ஊழ் என்று இளங்கோவடிகள் கருதுகிறார்.

இளங்கோவடிகளுக்குச் கண்ணகியின் வரலாற்றைக் கூறியவர் சீத்தலைச் சாத்தனார். கண்ணகியின் வரலாற்றை சீத்தலைசாத்தனார் எழுத வேண்டும் என்று சொன்னவர் இளங்கோவடிகள்.
கண்ணகியின் வரலாற்றை எழுதத் தகுதியுடையவர் இளங்கோவடிகளே என்று சொல்லி அவரே எழுத வேண்டும் என்று சொன்னவர் சீத்தலைத் சாத்தனார்.

இளங்கோவடிகள் தம் நூலைச் சீத்தலைச் சாத்தனார் முன் அரங்கேற்றினார். கூத்து ஆடல் இசை, குழல் தண்ணுமை, யாழ் ஆகியவற்றைக் கற்பிக்கும் ஆசிரியர் இலக்கணமும், அரங்கின் இலக்கணமும் ஆடும் இயல்பும் பற்றிய செய்திகள் அரங்கேற்றுக் காதையில் இடம் பெற்றுள்ளன.

தவறு செய்வோரைப் பூதம் புடைத்துண்ணும் இடம் பூத சதுக்கம் பூதத்தின் பெயர் சதுக்க பூதம். அரசன் தவறு செய்யினும் அமைச்சர்கள் நடுநிலை தவறினும் அவற்றை அறிவிக்கப் பாவை ஆடும் இடம் பாவை மன்றம். மழை வேண்டி எடுக்கப்படும் விழா இந்திர விழா.


FUTURE VISION

இந்திரா விழா குறித்துச் சிலப்பதிகாரமும் மணிமேகலையும் கூறுகின்றன. மதுரையில் கோவலனைச் சந்தித்தவன் மாடல் மறையோன். கோவலனின் குலதெய்வத்தின் பெயர் மணிமேகலை. கோவலன் தன் மகளுக்குத் தன் குலத்தெய்வத்தின் பெயரை வைத்தான். கடக்களிறு அடக்கிய கருணை மறவன் கோவலன். ஆந்தணப் பெண்ணுக்கு உதவி செய்து செல்லாச் செல்வனானவன் கோவலன். முதியோள் துன்பம் துடைக்கச் சதுக்கப் பூதத்திடம் உயிர் கொடுக்கத் துணிந்த இல்லோர் செம்மல் கோவலன். கூடல் மகளிர் ஆடல்கண்டு மனம் திரிந்தவன் பாண்டியன். அதனால் ஊடல் கொண்டு பிரிந்து சென்றவள் கோப்பெருந்தேவி.

ஊடல் நீக்கப் பாண்டியன் சென்றபோது இடையில் வந்து சந்தித்தவன் பொற்கொல்லவன். பூம்புகாரில் வாழ்ந்த ஊழு கற்புடைய மகளிர் பற்றிக் கண்ணகி வஞ்சினமாலை என்ற காதையில் கூறுகிறாள். மதுரை எரிந்த நாள் ஆடி மாதம் கிருஷ்ண பட்சம் எட்டாம் நாள் கார்த்திகையும் பரணியும் சேர்ந்திருந்த வெள்ளிக்கிழமை.

கண்ணகியின் காற்சிலம்பில் இருந்ததுமாணிக்க பரல், கோப்பெருந்தேவியின் காற்சிலம்பில் இருந்தது முத்துப்பரல். வரி என்பதற்கு பாடல் என்று பொருள். பாலைநில மக்களின் பாட்டு வேட்டுவ வரி ஆகும்.

நெய்தல் நில மக்களின் பாட்டு கானல்வரி ஆகும். பந்தடிக்கும் போது பாடும் பாட்டு கந்துகவரி ஆகும். ஊஞ்சலாட்டத்தின் போது பாடும்பாட்டு ஊசல் வரி. கழகாட்டத்தின்போது பாடும்பாட்டு அம்மானைவரி.

குரவை என்பது 7,8,9 பேர் கைகோர்த்து ஆடும் கூத்து. முல்லை நில மக்களின் கூத்து ஆச்சியர் குரவை ஆகும். குறிஞ்சி நில மக்களின் கூத்து குன்றக் குரவை ஆகும்.

துணங்கை என்பது ஆணும் பெண்ணும் தம் இடுப்பில் கையை வைத்தக் கொண்டு மன்னும் பின்னும் சாய்ந்து ஆடும் ஆட்டம். அம்மானை வரியில் புகழப்படுபவன் சோழன். கந்துக வரியில் புகழப்படுபவன் பாண்டியன் ஊசல்வரியில் புகழப்படுபவன் சேரன்.

வள்ளைப் பாட்டு என்பது உலக்கைப்பாட்டு. தூங்கெயில் மூன்று எரிந்தவன், கறவைக்கு முறை செய்தவன் இமயத்தில் புலி பெறித்தவன் - சோழன்.

இந்திரனின் ஆரம் அணிந்தவன் - பாண்டியன். கடம்பு எறிந்தவன் பாரதப் போரில் பெருஞ்சோறு அளித்தவன் யவனரை வென்றவன் - சேரன்

வணிகர்களுக்குக் கொடுக்கும் பட்டம் காவிதி, எட்டி. வீரர்களுக்குக் கொடுக்கும் பட்டம் ஏனாதி. பிறவாயாக்கைப் பெரியோன் - சிவன் ஊரின் நடுவில் உள்ள சிவன் கோயில் ஊர்க்கோட்டம். ஊர்ப்புறத்தில் உள்ள மாசாத்தன் கோயில் புறம்பணையான் கோட்டம்.

முருகன் இருக்கும் கோயில் வேற்கோட்டம் அருகன் கோயில் நிக்கந்தக் கோட்டம். கற்பக மரம் இருக்கும் கோயில் அமரர்கோட்டம். கொடுகொட்டி கொட்டி சேதம் இரண்டும் ஆடல் வகை. முப்புரம் எரித்த சிவன் ஆடிய ஆட்டம் கொடுகொட்டி சிவன் - பார்வதி (பைரவி) வடிவில் ஆடிய ஆட்டம் பாண்டரங்கம்.

கம்சன் அனுப்பிய யானையைக் கொல்ல கண்ணன் ஆடியது அல்லியத் தொகுதி. வாணாசுரனை அழிக்க கண்ணன் ஆடியது மல்லின் ஆடல் சூரனை வென்ற முருகன் ஆடியது துடி ஆடல்.

முருகன் குடையை முன்னே சாய்த்து ஆடியது குடக்கூத்து (கரகாட்டம்)

காமம் ஆடியது பேடி ஆடல்

மாயவள் (துர்க்கை) ஆடியது மரக்கால் ஆட்டம்(பொய்க்கால்)

திருமகள் ஆடியது பாவையாடல்

ஆயிராணி வயலில நின்று ஆடியது கடையம்
குழல் என்பது துளைக்கருவி அல்லது ஊது கருவி

யாழ் என்பது நரம்பு கருவி அல்லது மீட்டுக்கருவி.

முழவு தண்ணுமை, மத்தளம் என்பன தோற்கருவி அல்லது அடிகருவி

காமன் மகன் அநிருத்தன். இந்திரன் மகன் சயந்தன். சயந்தன் காதலி ஊர்வசி. சயந்தன் உலகில் தலைக்கோலாகப் பிறந்தவன். ஊர்வசி உலகில் மாதவி என்ற பெயரில் பிறந்தவள் அந்தமாதவி வழிவந்தவள் தான் கோவலனின் மாதவி.

**மேற்கோள்**

**"ஊழ்வினை உருத்துவந்து ஊட்டும்"**

**"அரைசியல் பிழைத்தோருக்க அறங்கூற்றாகும்"**

**"உரைசால் பத்தினிக்கு உயர்ந்தோர் ஏத்துவர்"**

**இம்மூன்றும்** குறிக்கோள்

"கவவுக்கை நெகிழாமல் **தீது அறுக எனவாழ்த்தி"**

**"மலையிடை பிறவாமணியே என்கோ"**
**கோவலன் கூற்று**

**"நம்மை மறந்தாரை நாம மறக்க மாட்டேமால்"** மாதவி

**"மாலை வாரார் ஆயினும் காலைகாண்குதும்" - மாதவி**

**"செய்தவம் இல்லோர்க்குத் தேவர் வரம் கொடார்" - இடாகினிப்பேய்**

**"சலம் புணர் கொள்கை சலதியோடு ஆடி**
**குலந்தரு வான்பொருள் குன்றம் தொலைத்த**
**இலம்பாடு நாணுத் தரும்" - கோவலன்**

**"முள்ளுடைக் காட்டில் முதுநரி ஆகு"**
**-கவுந்தியடிகள்**

**"இம்மை செய்தன யானறி நல்வினை**
**ஊம்மைப் பயன்கொல் ஒருதனி உழத்தி"**
**- மாடலமறையோன்**

**"இடைக்குல மடந்தைக்கு அடைக்கலம் தந்தேன்"**
**- கவுந்தியடிகள்**

**"திருமால் சீர் கேளாத செவியென்ன செவியே"**
**"காரியவனைக் காணாத கண்ணென்ன கண்ணே"**
**"நாராயணா என்னா நாவென்ன நாவே"**
**- என்று சமய ஒருமை பாடியவர் இளங்கோவடிகள்**

**"பத்தினிக்கடவுளைப் பரசல் வேண்டும்"**
**- வேண்மாள்**

**"முற்பகல் செய்தான் பிறன்கேடு தன்கேடு**
**பிற்பகல் காண்குறூஉம்" – கண்ணகி**

**"மன்பதை காக்கும் நற்குடி பிறத்தல்**
**துன்பம் அல்லது தொழு தகவு இல்"**
**- செங்குட்டுவன்**

**"தென்னவன் தீதிலன் தேவர்கோன் தன்கோயில்**
**நல்விருந் தாயினன் நான் அவன்தன் மகள்"**
**- கடவுட் கண்ணகி**

FUTURE VISION

**"பசியும் பிணியும் நீங்கி**
**வசியும் வளனும் சுரக்கென வாழ்த்தி"**

**இவ்வடிகள் சிலப்பதிகாரம் மணிமேகலை இரண்டிலும் வருகிறது.**

**"முல்லையும் குறிஞ்சியும் முறைமையில் திரிந்து**
**பாலை என்பதோர் படிமம் கொள்ளும்"**
**- மாங்கோட்டு மறையோன்**

**சிலம்பின் புகழ்**

**"நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம் என்றோர்**
**மணியாரம் படைத்த தமிழ்நாடு" - பாரதியார்**

**"சிலப்பதிகாரச் செய்யுளைக் கருதியும்... தமிழ்ச்**
**சாதியை அமரத்தன்மை வாய்ந்தது என்ற உறுதி கொண்டிருந்தேன்" – பாரதியார்**

**"யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல்**
**வள்ளுவனைப் போல் இளங்கோவைப்போல்**
**பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை" - பாரதியார்**

**"தமிழ்கூறும் நல் உலகம்" என்று மூன்று நாடுகளையும்**
**ஒருங்கே காணும் தன்மை தொல்காப்பியத்தில் உண்டு.**

**ஆனால்** சங்க இலக்கயத்தில் இல்லை.

**"முதன்முதலாய் தமிழ் மக்கள் எல்லோரையும் ஒருங்கே காணும் நெறியில் நின்று நூல் செய்தவர் இயங்கோவடிகள்**

நாட்டுபுறப் பாடல்களுக்குச் சிறப்புத் தந்து முதலில் பாடியவர் இளங்கோடிகள்

**நாட்டு**புறப் பாடல்களுக்குச் சிறப்பத் தந்து இளங்கோவடிகளை அடுத்துப் பாடியவர் மாணிக்கவாசகர்.

சைவ வைணவ நெறிகளையும் பாடிய சமணநூல் சிலப்பதிகாரம்

முதல் காப்பியம். முத்தமிழ்க் காப்பியம், நாடகக் காப்பியம்.
முதல் தேசியக் காப்பியம் சிலப்பதிகாரம்.

இரண்டாவது தமிழ்த் தேசிய காப்பியம் பெரிய புராணம்.

பாவின வளர்ச்சிக்கு வித்திட்ட நூல் சிலப்பதிகாரம்.

சிலப்பதிகாரத்திற்குப் சிறந்தஉரை எழுதியவர் அடியார்க்கு நல்லார்.

**மணிமேகலை**

ஆசிரியர் மதுரைக் கூரவாணிகன் சீத்தலைச் சாத்தனார்

கூலம் - தானிய வகைகள்

வேறுபெயர்கள் தண்டமிழ்ச் சாத்தன், தண்டமிழ்புலவன்

காலம் 2 ஆம் நூற்றாண்டு

இந்நூலக்கு மணிமேகலை துறுவு என்ற பெயரும் உண்டு. பௌத்த காப்பியம்

தமிழின் இரண்டாவது காப்பிய நூல்

சமயப் புசலுக்கு வித்திட்ட முதல்நூல்

துறவுக்கு முதன்மை கொடுக்கும் நூல்



FUTURE VISION

கோவலனுக்கும் மாதவிக்கும் பிறந்த மணிமேகலை என்ற பெண்ணின் வரலாற்றைக் கூறும் நூல்

பெண்ணின் பெருமை பேசும் நூல் (சிலப்பதிகாரம் போன்று )

சமூக சீர்திருத்தக் காப்பியமாக விளங்குவது

சங்க இலக்கியம் அல்லறத்திற்கு முதன்மை கொடுத்தது. திருக்குறள் இல்லறம் துறவறம் இரண்டுக்கும் முதன்மை கொடுத்தது. மணிமேகலை துறவுக்கு முதன்மை கொடுத்தது.

**நூல் அமைப்பு**

காண்டப் பிரிவுகள் இல்லை

30 காதைகள் உள்ளன.

முதல் காதை விழாவறைக் காதை

இறுதிக் காதை பவத்திறம் அறுக எனப் பாவை நோற்ற காதை

முழுவதும் ஆசிரியப் பாவால் ஆனது

27 வது சமயக்கணக்கர்தம் திறம் கேட்ட காதை மட்டும் இணைக்குறள் ஆசிரியப்பாவாலானது: மற்றவை நிலை மண்டில ஆசிரியப்பாக்கள்

**கதைமாந்தர்**

மணிமேகலையின் தோழி சுதமதி: கண்ணகியின்தோழி தேவந்தி

மாருத வேகனால் கைவிடப்பட்டவள் சுதமதி

புத்தத்துறவி அறவண அடிகள்

ஆதிரையின் கணவன் சாதுவன்

இழந்த பொருளை ஈட்டக் கடல் கடந்து சென்றவன் சாதுவன்

மணிமேகலைக்கு முதன்முதலாக அமுதசுரபியில் பிச்சையிட்டவள் ஆதிரை.

ஆதிரையின் வரலாற்றை மணிமேகலைக்குச் சொன்னவள் காயசண்டிகை

வித்யாதர மங்கை காய சண்டிகை (காஞ்சினபுரம்)

விருச்சிக முனிவரால் பசி நோய் சாபம் பெற்றவள் காய சண்டிகை

காய சண்டிகையின் பசிநோயைப் போக்கியவள் மணிமேகலை

மணிமேகலையை மணிபல்லவத்தீவுக்கு அழைத்துச் சென்ற தெய்வம் மணிமேகலாத் தெய்வம்

மணிமேகலாத் தெய்வம் மணிமேகலைக்கு கொடுத்த வரம் மூன்று

ஆபுத்திரனுக்க அமுதசுரபியைக் கொடுத்தது சிந்தாதேவி

அமுதசுரபியைக் கொமுகியில் இட்டவன் ஆபுத்திரன்

அமுத சுரபி பற்றி மணிமேகலைக்குச் சொன்னது தீவதிலகை

**இடங்கள்**

மனிமேகலை பிறந்த ஊர் பூம்பூகார்

மணிமேகலை மறைந்த ஊர் காஞ்சிபுரம்

FUTURE VISION

மணிமேகலை சமயவரிதகளிடம் உண்மை கேட்ட ஊர் வஞ்சி மாநகரம்

பூம்புகாரில் உள்ள சோலைகள்: இலவந்திகை, உய்யாவனம் உவவனம் கவெரவனம் சம்பாதிவனம்

மணிமேகலை பூக்கொய்யச் சென்ற வனம் உவவனம்

மணிபல்லவத்தில் இருந்த பீடிகை புத்தபீடிகை

அமுத சுரபி இருந்தஇடம் கோமுகி என்ற பொய்கை

அமுத சுரபிக்கு வேறு பெயர் அட்சய பாத்திரம்

சக்கரவாளக் கோட்டம் என்பது சுடுகாடு

உலக அறவி என்பது தருமசாலை

**செய்திகள்**

சம்பு தீவின் தெய்வம் சம்பு

சம்புத் தீவிற்கு நாவலந்தீவு என்ற வேறுபெயரும் உண்டு.

நாவலந்தீவு என்பது இந்தியா

சம்பாபதி புகார் நகரத்திற்குக் காவிரி பூம்பட்டினம் என்ற பெயர் அளித்தது

முதன்முதலில் இந்திராவிழா எடுத்தவன் தூங்கெயில் எறிந்த தொடிதோட் செம்பியன்

இந்திரா விழா 28நாட்கள் நடைபெறும்

மழைவேண்டி எடுக்கப்படும் விழா இந்திரா விழா

பூம்பூகாரில் இந்திராவிழா மிகச் சிறப்பாக நடந்தாக சிலப்பதிகாரம் மணிமேகலை என்ற இரண்டு நூல்களும் கூறுகின்றன.

மூவகைப் பத்தினிப் பெண்டிர்

1. உடன் எரி முழ்குவர் 2. தனிஎரி முழ்குவர் 3. கைம்மை நோன்பு நோற்பார்

உடல் அடக்க முறை ஐந்து

1. சுடுதல் 2. வாளா இடுதல் 3. தோண்டிப்புதைத்தல் 4. பள்ளத்தில் அடைத்தல் 5. தாழியில் கவிழ்த்தல்

தீயவை பத்து

1. கொலை, 2.களவு, 3.காமம், 4.பொய்,5. குறளை 6. கடுமொழி 7. பயனில் சொல் 8. வே·.கல் 9. வெகுளல் 10. பொல்லாக்காட்சி

சுடலை நோன்பிகள் என்போர் காபாலியர்கள்

விரதயாக்கையார் என்போர் விரமிருப்போர்

பௌத்த சமயத்தில் மதிப்பமிக்க எண் 7

தேவேந்திரன் இருக்கை மீது விரிக்கப்பட்டிருக்கும் வெள்ளைக் கம்பளம் பாண்டு கம்பளம் எனப்படும்

இரட்டைக் காப்பியத்துள் கிளைக்கதைகள் மிகுந்த நூல் மணிமேகலை

இரட்டைக் காப்பியத்துள் பிறமொழிகலப்பு மிகுந்த நூல் மணிமேகலை.

பிறமொழி சொற்கள் மிகுதியும் தமிழ்படுத்திய நூல் மணிமேகலை

FUTURE VISION

**முற்பிறப்பு செய்திகள்**

1

அத்திபதி + நீலபதி
↓
இராகுலன்
↓
உதயகுமாரன்

2

இரவிவன்மன் + அமுதபதி
↓
இலக்குமி → மணிமேகலை
தாரை → மாதவி
வீரை → சுதமதி

**மேற்கோள்**

**"வினையின் வந்தது வினைக்கு விளைவாவது**
**புனைவன நீக்கின் புலால்புறத்து இடுவது**
**மூப்பு விளி உடையது தீப்பிணி இருக்கை"**

உடலின் இழிவை சுதமதி உதயகுமரனுக்குக் கூறியது

**"கோல் திரிந்திடின் கோள்நிலை திரியும்**
**கோள்நிலை திரிந்திடின் மாரிவளம் குன்றும்**
**மாரிவளம் குன்றின் மன்னுயிர் இல்லை**
**மன்னுயிர் எல்லாம் மண்ணாள் வேந்தன்**
**தன்னுயிர் என்னும் தகுதி இன்றாகும்"**

மணிமேகலை தெய்வம் உதயகுமாரனுக்கு அவன் கனவில் சொன்னது.

**"குடிப்பிறப்பு அழிக்கும் விழுப்பம் கொல்லும்**
**பிடித்த கல்விப் பெரும்புணை விடூஉம்**
**நாண்அணி களையும் மாண் எழில் சிதைக்கும்**
**பசிப்பிணி என்னும் பாவி"**

பசியின் கொடுமையை தீவதிலகை மணிமேகலைக்குச் சொன்னது

**"ஆற்றுநர்க்க அளிப்போர் அறவிலைபகர்வோர்**
**ஆற்றா மாக்கள் அரும்பசி களைவோர்**
**மேற்றே உலகின் மெய்ந்நெறி வாழ்வோர்க்**
**மண்திணி ஞாலத்து வாழ்வோர்க் கெல்லாம்**
**உண்டிகொடுத்தோர் உயிர் கொடுத்தோரே"**

தீவதிலகை மணிமேகலைக்குச் சொன்னது

**உண்டிகொடுத்தோர் உயிர்கொடுத்தோரே என்று முதன் முதலில் கூறியவர் குடபுலவியனார் - புநறாநூறு**

**"பிறத்தலும் மூத்தலும் பிணிக்கப்பட்டு இரங்கலும்**
**இறந்தலும் உடையது இடும்பைக் கொள்கலம்**
**மக்கள் யாக்கை இதுஎன உணர்ந்து**
**மிக்க நல்லறம் விரும்புதல் புரிந்தேன"**
**மணிமேகலை உதய குமரனுக்குச் சொன்னது**

**"அறம் எனப்படுவது யததெனக் கேட்பின்**
**மறவாது இதுகேள் மன்னுயிர்க் கெல்லாம்**
**உண்டியும் உடையும் உறையுளும் அல்லது கண்டதில்**
**மணிமேகலை புண்ணிய அரசனுக்கு (ஆபுத்திரன்)டிகூறியது**

FUTURE VISION

**"இளமையும் நில்லா யாக்கையும் நில்லா**
**வளவிய வான்பொருள் செல்வமும் நில்லா**
**புத்தேள் உலகம் புதல்வரும் தாரார்**
**மிக்க அறமே விழுத்துணை ஆவது"**
**- விசாகை தருமதத்தனுக்குக் கூறியது**

**3.சீவகசிந்தாமணி**

**ஆ**சிரியர் திருத்தக்க தேவர்
காலம் 9 ஆம் நூற்றாண்டு. கருத்துவேறுபாடு உண்டு.

திருத்தக்க தேவர் நிலையாமை குறித்து எழுதிய நூல் நரிவிருத்தம்

விருத்தப்பாவால் இயற்றப்பட்ட முதல் காப்பியம் சமணக் காப்பியம்.

மணநூல், காமநூல், முக்திநூல் என்ற வேறு பெயர்களும் உண்டு.

வடமொழியில் உள்ள கத்திய சிந்தாமணி, சத்திர சூடாமணி என்ற இரு நூலையும் தழுவி எழுதப்பட்டது சீவகசிந்தாமணி.

காண்டப் பிரிவு இல்லை.

13 இலம்பகங்களையும் 3145 பாடல்களையும் கொண்டது. முதல் இலம்பகம் நாமகள் இலம்பகம்.

இறுதி இலம்பகம் முக்தி இலம்பகம். காப்பிய தலைவன் சீவகன் சீவகன் சிந்தாமணியுடன் ஒப்பிடப்பட்டுள்ளான்.

சிந்தாமணி என்பது கேட்டதைக் கொடுக்கும் தேவலோகத்தில் உண்ண ஒரு மணி. (ரத்தினம்)

சீவகன் கல்வி கற்றதைத் கூறுவது நாமகள் இலம்பகம்

சீவகன் நாட்டைக் கைப்பற்றியதைக் கூறுவது மண்மகள் இலம்பகம்

சீவகன் ஆட்சி செய்ததைக் கூறுவது பூமகள் இலம்பகம்

சீவகன் வீடுபேறு அடைந்ததைக் கூறுவது முத்தி இலம்பகம்

பதுமுகனுக்கு கோவிந்தையைத் திருமணம் முடித்தது கோவிந்தையார் இலம்பகம்.

பதுமுகன் சீவகனின் நண்பன்

காந்தர்வத்தை குணமாலை, பதுமை, கேமசரி, கனகமாலை, விமலை, சுமைஞ்சரி, இலக்கணை ஆகிய எட்டுப் பெண்களைச் சீவகன் மணந்தான்

சீவகன் வீணைப் போட்டியில் வென்று முதலில் காந்தர்வத்தையை மணந்தான்

குணமாலையைச் சுண்ணப்பொடி தேர்வில் மணந்தான்

பதுமையாரை விடம் மீட்டு மணந்தான்

கனக மாலையைத் தடமித்தன் கொடுக்க மணந்தான்

விமலையை அவள் தந்தையாகிய காகதத்தனின் பண்டங்களை விற்று மணந்தான்

சுரமஞ்சரியை முதுமைக்கோலம் காட்டி மணந்தான்

நூல' ஆசிரியரே சீவகனுக்கு 'காமதிலகம்' எனப் பட்டம் சூட்டியுள்ளார்.

சீவகனின் பெற்றோா் சச்சந்தன் - விசயை

நாடு ஏமாங்கத நாடு



FUTURE VISION

தலைநகரம் இராசமாபுரம்
அமைச்சன் கட்டியங்காரன்

சீவகனின் தந்தையான சச்சந்தனைக் கொன்றவன் கட்டியாங்காரன்

சீவகன் பிறந்த இடம் சுடுகாடு

சீவகனை எடுத்து வளர்த்தவன் கந்துக்கடன் என்னும் வணிகன்

சீவகனுக்குக் கல்வி கற்பித்த ஆசிரியர் அச்சணந்தி

**மேற்கோள்**

**“இவ்வாறாகப் பிறப்பதுவோ**
**இதுவோ மன்னர்க்கு இயல் வேந்தே”**

**“மெய்வகை தெரிதல் ஞானம்**
**விளங்கிய பொருள்கள் தம்மை**
**பொய்வகை இன்றித்தேறல் காட்சி**
**ஐம்பொறியும் வாட்டி**
**உய்வகை உயிரைத்தேயாது**
**ஒழுகுதல் ஒழுக்கம் மூன்றும்**
**இவ்வகை நிறைந்த போழ்தே**
**இருவினையும் கழியும் என்றான்”**

**“சொல்லரும் சூற்பசும் பாம்பின் தோற்றம்போல் …**
**கல்விசேர் மாந்தரின் இறைஞ்சிக் காய்த்தவே”**

**“காய்மாண்ட தெங்கின் பழம் வீழ**
**ஏமாங்கதம் என்று இசையால் திசைபோயதுண்டே”**

**சிறப்பு**

அனைத்துச் சமயத்தவரும் விரும்பிக்கற்ற சமணக் காப்பியம் சைவனான குலோத்துங்க மன்னன் விரும்பிக்கற்ற காப்பியம்.

நூல் முழுமைக்கும் சைவரான நச்சினார்க்கினார் உரை எழுதியுள்ளார்.

இவர் இருமுறை உரை எழுதினார் என்பர்.

சைவரான உ.வே.சா. அவர்கள் முதன்முதலில் பதிப்பித்தார்.

அவர் பதிப்பித்த முதல் நூலும் சீவகசிந்தாமணியே ஆகும். கிறித்துவரான ஜி.யு.போப் இதனை இலியட் ஒடிசியுடன் ஒப்பிட்டுள்ளார்.

He is a prince among the Tamil poets (தமிழ்க் கவிஞர்களுள் இளவரசன்) என்று திருத்தக்க தேவரைப் புகழ்ந்து பாராட்டியவர் ஜி.யு. போப்

**வளையாபதி**

ஆசிரியர் பெயர் தெரியவில்லை

சமணக் காப்பியம்

விருத்தப்பாவால் ஆனது

முழுமையாகக் கிடைக்கவில்லை

கிடைத்தவை 72 பாக்கள்

மூலநூல் வைசிக புராணம் 35 வது சருக்கம்



FUTURE VISION

நவகோடி நாராயணன் பற்றிய நூல் நூல்

மடலேறுதல் பற்றிக் கூறும் காப்பிய நூல்

ஒட்டக்கூத்தர் கவியழகு வேண்டி வளையாபதியை நினைத்தார் என்று தக்காயகப் பரணியின் உரையாசிரியர் கூறுகிறார்.

**மேற்கோள்**

**“ பொறையில்லா அறிவு, போகப்புணர்வு**
**இலா இளமை, மேவல்**
**துறையிலா வனசவாவி, துகில் இலாக்**
**கோலத் தூய்மை**
**நறையிலா மாலை கல்வி இலாப்**
**புலமை, நன்னர்ச்**
**சிறைஇலா நகரம் போலும் சேய்இலாச்**
**செல்வம் அன்றே”**

**சிறப்பு**

இலக்கண இலக்கிய உரையாசிரியர்களால் மிகவும் போற்றப்பட்ட நூல்.

**குண்டலகேசி**

**ஆசிரியர் நாதகுத்தனார்**

காலம் 7 ஆம் நூற்றாண்டு

பௌத்த காப்பியம்

சுருண்ட தலைமுடியை உடையவள் என்று பொருள்

குண்டலகேசி விருத்தம் அகல கவி என்ற வேறு பெயர்களும் உண்டு.

நூல் முழுமையாகக் கிடைக்கவில்லை

கிடைத்தவை 224 பாடல்கள்

குண்டலகேசியின் வரலாற்றை நீலகேசி கூறுகிறது.

குண்டலகேசியின் இயற்பெயர் பத்திரை

இராசகிருக நாட்டு மந்திரியின் மகள்

குண்டலகேசியின் கணவன் காளன்: இவன் ஒரு கள்வன்

குண்டலகேசி சாரிபுத்தரிடம் தோற்றுப் புத்தமதம் தழுவினால்

கலைஞரால் ‘மந்திர குமாரி’ என்று திரைப்படமாக்கப்பட்டது.

**மேற்கோள்**

**“பாளையாம் தன்மை செத்தும்**
**பாலனாம் தன்மை செத்தும்**
**காளையாம் தன்மை செத்தும்**
**காழுறும் இளமை செத்தும்**
**மீளும் இவ் இயல்பும் இன்னே**
**மேல்வரும் மூப்பும் ஆகி**
**நாளும் நாம் சாகின்றோமால்**
**நமக்கு நாம் அழாதது என்னோ”**



FUTURE VISION

## காப்பிய இலக்கியம்

தமிழில் காப்பிய இலக்கியம் பல காலங்களில் பல்வேறு வளர்ச்சி நிலைகளைக் கண்டது. தொல்காப்பியத்திற்கு முன்பே பல வாய்மொழி வடிவக் காப்பியங்களும் எழுதப்பட்ட சில பெருங்காப்பியங்களும் தோன்றி வளர்ந்திருக்க வேண்டும் என்று நம்ப இடமுளது. நமக்குக் கிடைப்பனவற்றில் சிலப்பதிகாரமும் மணிமேகலையும் இரட்டைக் காப்பியங்கள் எனப் போற்றப்படுகின்றன.

பெருங்காதை ஒரு சிறந்த காப்பியமாகும்.

ஐம்பெருங்காப்பிம், ஐஞ்சிறு காப்பியம் என்ற மரபுகள் இடைக்காலத்தே தோன்றி, சமயவழிக் காப்பியங்கள் பல தொகைப்படுத்தப்பட்டன.

மொழிபெயர்ப்புக் காப்பியங்கள் குறிப்பிடற்பாலன.

இராமாயணம், பாரதம் இரண்டும் பல்வேறு வளர்ச்சி நிலைகளைக் கண்டன. பேரிய புராணமும் கம்பராமயணமும் மிகச் சிறந்த தனிப் பண்புகளைக் கொண்டனவாகும்.

புராணக் காப்பிய வளர்ச்சியும் குறிப்பிடற்பாலது.

தமிழில் சைவம், வைணவம், சமணம், பௌத்தம், கிறித்துவம், இசுலாமியம் எனப் பல்வேறு சமயச் சார்புக் காப்பியங்களின் வளர்ச்சியும் இக்காலக் குறுங்காப்பிய வளர்ச்சியும் எண்ணிப் பார்த்தற்குரியனவாகும்.

காப்பியம் என்ற சொல் ‘காவ்யா என்ற வட சொல்லின் திரிபன்று: தமிழாக்கமும் அன்று. காவியம் என்பதே அவ்வாறு தமிழாக்கப்பட்டது. தமிழில் முன்பே காப்பியம் என்ற சொல்வழக்கு உண்டு. காப்பியம் காப்பியாறு காப்பியக்குடி என்பன முறையே ஊர், ஆறு, குடிபெயர்களான விளங்கின. காப்பியனார் பல் காப்பியனார், காப்பியாற்றுக் காப்பியனார் ( காப்பியாறு ஓர் ஊர்) தொல்காப்பியர் என்பன மக்கட் பெயர்களாக வழங்கின. சிலம்பில் வரும் காப்பியத் தொல்குடி’ என்பது காப்பியக்குடியாம் ஊர்ப்பெயர். “காப்பியக் கலித்துறையாவது நெடிலடிநான்காய் வரும் கலித்துறை” என்பது வீரசோழிய உரை. முன்பு காப்பியம் என்பது மொழி மரபுகளைக் காத்தற்குரிய இலக்கண நூலைக் குறித்தது என்பது முனைவர் இரா. காசிராசன் கருத்தாகும். தொல்காப்பியம் பல்காப்பியம் என்பன இற்றனம் தோன்றின மணிமேகலை ‘நாடகக் காப்பிய நன்னூல்’ (19-80) என்றுகுறிப்பிடுகிறது.

இவ்வாறு முன்பு இலக்கணத்தைக் குறித்து மொழி மரபுகளைக் காக்கும் பெருநூல்களைக் குறித்து பேரிலக்கியங்களாம் தொடர்நிலைச் செய்யுளையும் இது குறிக்கலாயிற்று.

**காலம்**

சிலப்பதிகாரமே தமிழின் முதற்காப்பியம் என்பது அதன் கட்டமைப்பு, மொழிக்கூறு போன்றவற்றால் உறுதிப்படும். கடல்சூழ் இலங்கைக் **கயவாகு** மன்னன் கண்ணகிக்குப் பத்தினிக் கோட்டம் அமைத்தான். அவன் ஆட்சிக் காலம் இலங்கை வரலாற்றில் கி.பி. 114 – 135 ஆகும். எனவே அதன் காலம் கி.பி இரண்டாம் நூற்றாண்டு என தெளிவு. **நூற்றுவர்கன்னர்** பற்றிய செய்தி சிலம்பில் வருகிறது.. சதகர்ணிகள் எனப்படும். இச்சாதவாகனர் கி.மு. தொடங்கி கி.பி.220 வரை சிறப்புற்றிருந்தனர். கௌதம புத்திர சதகர்ணி என்ற அரசன் பெரும் புகழுடன் விளங்கினான். அவன் காலம் கி.பி. 106 -130. எனவே எவ்வாற்றானும் சிலம்பு நிகழ்ந்த காலத்தைக் கிறித்துவுக்குப் பிறகு ஒன்றிரண்டு நூற்றாண்டுக்குள் என்றே கொள்ள வேண்டும்.

மணிமேகலைக் கதை சிலம்புக் கதையுடன் தொடர்புடையது. சாத்தனார் பற்றிய குறிப்புச் சிலம்பிலும் உண்டு. இரு நூல்களுக்கும் உள்ள ஒற்றுமைகளும் பலவாகும். சமயச் சார்பால் மணிமேகலை வேறுபடுகிற தென்பது உண்மையே. ஆயினும் இவையிரண்டும் இரட்டைக் காப்பியங்கள் என்று எண்ணப்படுவதில் தவறொன்றுமில்லை.

அடுத்துச் சோழர் காலத்தேதான் பெரும்பான்மையான காப்பியங்கள் தோன்றின. கி.பி. 9 ஆம் நூற்றாண்டு முதல் 12 ஆம் நூற்றாண்டு வரை சோழப் பேரரசு ஓங்கியிருந்த காலத்தே தோன்றியதைச் சோழர் காலக் காப்பியங்கள் என அழைக்கலாம்.



FUTURE VISION

இங்ஙனம் தமிழில் காப்பிய காலம் இரண்டாக அமைவதால் முதற்காப்பிய காலம், பிற்காப்பிய காலம் எனவும் பகுத்துக் கூறுவர். நிலையான பேரரசுகள் ஆண்ட காலத்தே மக்கள் மன அமைதியுடன் விழாவிலும் மகிழ்ச்சியிலும் ஈடுபடுவர். காப்பியங்கள் உருவாகும் காலம் இத்தகையதே ஆகும். மூவேந்தர் ஆட்சியின் பயனாக அகமும் புறமும் வளர்ந்து கனிந்தவை இரட்டைக் காப்பியங்கள்: சோழப் பேரரசின் பயனாக உருவானவை இடைக்காலத்தவை .

**வகை தொகை**

தமிழ்க் காப்பியங்களில் தொன்மையுடையன இரண்டு. அன்றுமுதல் இன்றுவரை காப்பியங்கள் என்ற வகைமை தமிழில் வளர்ந்து வருகிறது. பல்வேறு வடிவமும் சாயலும் உணர்வும் பெற்று வளர்ந்து வரும் இதனைக் கீழ்வரும் பன்னிரண்டு பிரிவுகளுள் அடக்கலாம்

1. முதற் காப்பியம் - முத்தமிழ் காப்பியம், நாடகக் காப்பியம், சிலப்பதிகாரம்.
2. இரட்டைக் காப்பியம் - சிலப்பதிகாரம், மணிமேகலை
3. அகவற்காப்பியம் - அகவல் யாப்புடையள – பெருங்கதை முதல் மூன்று காப்பியங்களும் அகவல் யாப்பின.
4. முதல் ஐந்து காப்பியங்கள் - முதல் மூன்றுடன் சிந்தாமணி, சூளாமணி இரண்டையும் சேர்த்துக் காலத்தால் முற்பட்டவை எனக் கருதுவர்.
5. ஐம்பெருங் காப்பியங்கள் - சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, வளையாபதி, குண்டலகேசி
6. ஐஞ்சிறுகாப்பியங்கள் - யசோதர காவியம், உதயண குமார காவியம், நீலகேசி, நாககுமார காவியம், சூளாமணி
7. இராமயணங்கள் - இராம கதை, கம்ப இராமாயணம்
8. புராணக் காப்பியங்கள் - பெரிய புராணம், கந்த புராணம்
9. பாரத நூல்கள் - பெருந்தேவனார் பாரதம், பாரத வெண்பா, வில்லிபாரதம், நல்லாப்பிள்ளை பாரதம், நளவெண்பா நைடதம்.
10. புராணங்கள் - திருவிளையாடற் புராணம், தலப் புராணங்கள், பிற
11. சமயக் காப்பியங்கள் -

    இசுலாமியம் : சீறாப்புராணம்
    கிறித்தவம் : 1. தேம்பாவணி
    2. இரட்சணிய யாத்திரிகம்

12. இக்காலக் காப்பியங்கள் - பாஞ்சாலி சபதம், பாண்டியன் பரிசு, இராவண காவியம், முடியரசனின் பூங்கொடி, (கிறித்தவத்) திருத்தொண்டர் காப்பியம் (பேரா.இன்னாசி) பிற.

**சிலப்பதிகாரம்**

சிலப்பதிகாரம் தோன்றிய வரலாற்றைக் காட்சிக் காதையில் காணலாம். மலைவாணர் பலர்கூடி வேங்கை மரத்தடியில் துயருற்றிரந்து கணவனுடன் விண்ணகம் போன ஒரு பெண்ணைப் பற்றிப் பேரியாற்றங்கரைக்கு மலை வளம் காணவந்திருந்த சேரன் செங்குட்டுவனிடம் கூறினர். அம்மன்னனுடன் அவன் மனைவி வேண்மாளும் இளங்கோவும், தண்டமிழாசான் சாத்தனும் சென்றிருந்தனர். மலைவாணர் கூற்றைக் கேட்ட சாத்தனார் ஒண்டொடி மாதர்க் குற்றதையெல்லாம்" எடுத்துக் கூறுகிறார். இங்ஙனம் அக்கதையைக் கேட்ட காரணத்தால் உணர்ச்சியால் உந்தப் பெற்ற இளங்கோவடிகள்.

**"அரைசியல் பிழைத்தோர்க்கு அறங்கூற் றாவதூஉம்**
**உரைசால் பத்தினிக் குயர்ந்தோர் ஏத்தலும்**
**ஊழ்வினை உருத்துவந்தூட்டும் என்பதூஉம்**
**சூழ்வினைச் சிலம்பு காரணமாகச்**
**சிலப்பதி காரம் என்னும் பெயரால்**
**நாட்டுதும் யாமோர் பாட்டுடைச் செய்யுள்"**

என்றார்.



FUTURE VISION

சிலப்பதிகாரத்தை 30 காதைகளாகப் பகுத்து மூன்று காண்டங்களில் அமைத்து அருளினார். புகார்க் காண்டம் 10 காதைகள்: மதுரைக் காண்டம் 13 காதைகள்: வாஞ்சிக் காண்டம் 7 காதைகள் இவற்றுள் வேட்டுவவரி, கானல் வரி போல் வரிப்பாடல்களாக அமைந்த காதைகளும் ஆய்ச்சியர் குரவை, குன்றக் குரவை போல் குரவையாடல்களாயமைந்த காதைகளும் உள. மங்கலவாழ்த்து முதல் வரந்தரு காதை வரை கண்ணகியைப் பத்தினித் தெய்வமாக்கிக் காட்டுதலேஇளங்கோவின் உட்கோளாகும். ஆதனால் உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்துவர் என்பதே சிலம்பின் உயிரோட்டம் எனலாம். கோவலன் மாதவியைப் பிரியும் போதும், கோவலனும் கண்ணகியும் புகார் நகரைப் பிரியும் போதும் கோவலன் உயிர் பிரியும்போதும் ஊழ்வினை உருத்துவந்து ஊட்டக் காண்கிறோம். பாண்டியன் தான் செய்த தவற்றுக்காக இறப்பது ‘அரசியல் பிழைத்தோர்க்க அறம் கூற்றாகும்’ என்பதைக் காட்டுகிறது.

இளங்கோவடிகள் இந்நோக்கங்கட்காக மட்டுமே சிலம்பைப் படைத்தாரல்லர்.பதிக்கத்தில் ‘முடிகெழு வேந்தர் மூவர்க்குமுரியது அடிகள் நீரே ஆருளுக’ என்றதற்க ஒப்ப மூன்று நாடு, மூன்று நகரம், மூவேந்தா் என அனைத்தையும் நடுநிலைமையுடன் ஒருங்கே காட்டிக் தமிழக ஒருமைப்பாட்டைத் தோற்றுவித்தலே அவரது தலையாய் நோக்கமாகும்.

இளங்கோவடிகள்இசைநாடகப் பண்புகள் மிளிர இதனையாத்தமையால் இ:.து இ.யலிசை நாடகப் பொருட் தொடர் நிலைச் செய்யுள் எனப்படும். இடையிடையே ஒரு சிறிது உரைநடை வரக் கோத்தமையால் உரைநடையிட்ட பாட்டுடைச்செய்யுளு’ மாகும். நாடகக் காப்பியம், முத்தமிழ்க் காப்பியம், குடிமக்கள் காப்பியம் என்றெல்லாம் இன்று அது சிறப்பிக்கப்படுகின்றது. “சிலப்பதிகாரம் என்று ஓர் மணி ஆரம் படைத்த தமிழ்நாடு” என்ற பாரதியார் “நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம்” எனப் பாராட்டியிருப்பது குறிப்பிடத்தக்கது. இதற்கு முழுவதும் அரும்பத உரையொன்றும் 23 காதை வரை (கானல் பரி நீங்கலாக) அடியாருக்கு நல்லார் உரையும் உள.

கோவலன் என்ற வணிக மகனை மணந்து கொண்ட கண்ணகி சில ஆண்டுகள் அவனுடன் இன்புற்று வாழ்ந்தாள். மாதவி என்ற கணிகை ஆடற்கலையரசியாய் அரங்கேறிய போது, அதனைக்கண்டு மனத்தைப் பறிகொடுத்த கோவலன் தன் வீட்டையும் மனைவியையும் மறந்து அவளுடனேயே உறைவானாயினான். பின்னர் அம்மாதவியுடன் மனம் மாறுபட்டு, அவன் இல்லம் திரும்பினான். அப்போது எஞ்சியிருந்த சிலம்புடன் அவன் வாணிகம் செய்து பிழைத்தற் பொருட்டு மாடமதுரை நோக்கித் தன் மனைவியுடன் நடக்கலானான். கவுந்தியடிகள் என்ற சமணத்துறவி அவர்களுக்கு வழிக் துணையானார். வழியிடையே எதிர்ப்பட்ட மாங்காட்டு மறையவனிடம் வழி கேட்டுக் கொண்டு நடந்து அவர்கள் புறஞ்சேரியை அடைந்தனர். அங்கே துறவிகளே தங்கலாம். ஆதலின் கவுந்தியடிகள் அவ்வழியாகப் போந்த மாதரியிடம் கண்ணகி கோவலன் இருவரையும் ஒப்படைத்து ஊருக்குள் அனுப்பி வைத்தார்.

மாதரி வீட்டில் மனைவி சமைத்த உணவினையுண்டு கோவலன் நகருக்குள் புறப்பட்டான். வழியிடையே பொற்கொல்லன் ஒருவனைக் கண்டு சிலம்பைக் காட்டினான். அவன் மன்னனுடைய தேவியினது காற்சிலம்பை முன்னமே திருடியவனாதலின் கோவலனைக் கள்வன் என அரசனிடம் பிடித்துக் கொடுத்துவிட்டான். அரசன் ஆராயாது கொல்லும்படி கட்டளையிட்டு விட்டதால், கோவலன் கொலையுண்டான் பின்னர் கண்ணகி பாண்டியன் அவை சென்று வழக்காடி தன் சிலம்பு மணிப்பரல் உடையதெனக் கூறி அதனை உடைத்து மெய்ப்பித்தாள். பாண்டியன் தேவியின் காற்சிலம்பு முத்துப்பரல்களை உடையது. அதனால் தன் குற்றமுணர்ந்த பாண்டியன் அரியணையிலிருந்தவாறே விழுந்து உயிர் விட்டான்: அவன் தேவியும் உடனுயிர் நீத்தாள். சினந் தணியாத கண்ணகி மதுரையை எரியூட்டினாள். பிறகு மேற்கு நோக்கியே நடந்து சேரநாட்டு எல்லையை அடைந்து நெடுவேள்குன்றம் அடிவைத்து ஏறி வேங்கைமர நிழலிலிருந்து பதினான்காம் நாள் வானவனாகிய கணவன் வந்தழைக்க உடன் சென்றான். இங்ஙனம் மதுரைக் காண்டத்துடன் அவலமாகக் கதை முடிகிறது. வஞ்சிக் காண்டத்தில் செங்குட்டுவன் இமயத்தில் கல்லெடுத்துகட கங்கையில் நீராட்டிக் கோயிலெழுப்பிய செய்தி இடம் பெறுகிறது.

**தனிச்சிறப்புகள்**

சங்க காலச் சாயலையும் சங்க இலக்கியப் பண்புகளையும் நாம்சிலம்பில் மிகுதியாகக் காண்கிறோம். சிலம்பில் காணப்படும் அகப்புறுக் கூறுகள் மிகப்பல முல்லை (ஆய்ச்சியர் குரவை), குறிஞ்சி (குன்றக் குரவை), மருதம் (நாடுகாண்காதை)” நெய்தல் (கானல்வரி), பாலை (வேட்டுவ வரி) என ஐந்துநிலப்பாங்கும் மக்கள் வாழ்வு முறையும் பற்றிய பகுதிகள் பலவுள. கானல்வரியும் குன்றக் குரவையும் போல்வன உணர்ததும் அகத்திணைக் கூற்றுமுறைகளும் பலவாகும். புறத்திணை வளர்ச்சியையும் நாம் சிலம்பில் காண்கிறோம். “காட்சி கால்கோள் நீர்ப்படை நடுகல், சீர்த்தகு சிறப்பிற் பெரும்படை வாழ்த்தல்” என (1006) ஆறு துறைகளைத் தொல்காப்பியர் சுட்டுகின்றார். இவற்றையே காட்சிக்காதை கால்கோட் காதை, நீர்ப்படைக் காதை, நடுகற் காதை, வாழ்த்துக் காதை, வரந்தரு காதை எனச் சிலம்பு காதைகளாக வகுத்துரைக்கிறது. சிலம்பு திருக்குறளின் வழியையும் பின்பற்றுகிறது என்பதற்குப் பல சான்றுகள் உள.

FUTURE VISION

**“பிறர்க் கின்னா முற்பகல் செய்யின் தமக்கின்னா**
**பிற்பகல் தாமே வரும்”**

என்ற குறட் கருத்தே.

**“முற்பகல் செய்தான் பிறன்கேடு தன்கேடு**
**பிற்பகல் காண்குறூஉம் பெற்றிய காண்”**

எனக் கண்ணகி வாயிலாக வெளிப்படுகிறது.

இங்ஙனம் தொகைப் பாடல்களோடு ஒற்றுமைப்படினும் அவற்றின் வேறுபட்டு நின்று அக்காலக்கலைகளையும் மக்கட் பழக்கவழக்கங்களையும் உணர்த்துமிடங்கள் பலவாகும். மரபு தழுவிய அகப்புறப் பாடல்களுக்கும் கதை தழுவிய சிலம்பிற்கும் இங்ஙனம் வேறுபாடியிருப்பது இயற்கையேயன்றோ?

சிலப்பதிகாரம் தமிழர்களின் ‘இசையிலக்கணம்’ உணர்த்தும் நூலென்று பாராட்டப்படுகிறது. மங்கல வாழ்த்துப் பாடல், அரங்கேற்று காதை, கானல் வரி வேனிற் காதை, வேட்டுவவரி, ஆய்ச்சியர் குரவை, துன்ப மாலை, ஊர்சூழ்வரி, வஞ்சினமாலை, குன்றக் குரவை, வாழ்த்துக் காதை, ஆகியன அக்காலத்து இசைக்கலை பற்றியும் ஆடல்வகை பற்றியும் உணர்த்தும் செய்திகள் பலவாகும். மாதவி தன் நாட்டியக்கலையை நாட்டிய ஆசிரியனிடம் மட்டும் பயலவில்லை. அவ்வாசிரியனுடன் இசை, தமிழ் தண்ணுமை குழல் யாழ் ஆசிரியர்களும் அவளுக்குப் பயிற்சி தந்தனர் என்பது அவள் அரங்கேறிய காலை உணர்த்தப்படுகிறது.

**குழல்வழி நின்றது யாழே: யாழ்வழித்**
**தண்ணுமை நின்றது தகவே: தண்ணுமைப்**
**பின்வழி நின்றது முழவே: முழவோடு**
**கூடிநின் றிசைத்தது ஆமந்திரிகை”**

இவ்வளவு பின்னணி இசையுடன் நாட்டிய நன்னூலை நன்கு கடைப்பிடித்து மாதவி ஆடினாளாம்.

சிலம்பு கூறும் நாட்டிய அரங்கு அமைப்பு எழினி (திரை) அமைப்பு, விளக்கு ஒளி அமைப்பு அனைய செய்திகள் சிறப்பானவை. கடலோடு காதையில் **பதினொரு** வகை ஆடல்கள் சுட்டப்படுகின்றன. கொடுகொட்டி பாண்டரங்கம், அல்லியம், மல்லாடல், துடிக்கூத்து, குடைக்கூத்து, குடக்கூத்து, கேடி ஆடல், மரக்காலாடல் பாவைக்கூத்து கடையம் என்பன அவை. மாதவி இவற்றை எங்ஙனம் ஆடினாள் தெரியுமா?

**“அவரவர் அணியுடன், அவரவர் கொள்கையின்**
**நிலையும் படிதமும் நீங்கா மரபின்**
**பதினோர் ஆடலும் பாட்டின் பகுதியும்**
**விதிமாண் கொள்கையின் விளங்கக் காணாய்”**

என்று விஞ்சையன் தன் காதலிக்கு காட்டி மகிழ்கின்றான். எண்வகை வரிக்கூத்தையும் அது விளக்குகிறது

சிலப்பதிகாரம் நாட்டுப்புறப் பாடல்களாகிய வாய் மொழி இலக்கியத்தைப் பெரிதும் போற்றி, நம் நெஞ்சையள்ளும் வகையில் வெளிப்படுத்துகிறது. வேட்டுவவரி கானல் வரி, ஆற்றுவரி, ஊசல் வரி, கந்துக வரி, அம்மானை வரி, என வருவன நாட்டுப்புறப் பாடல்களின் இலக்கிய வடிவங்களே.

**“திங்கள் மாலை வெண்குடையான்**
**சென்னி செங்கோல் அதுஒச்சி**
**கங்கை தன்னைப் புணர்ந்தாலும்**
**புலவாய் வாழி காவேரி**
**கங்கை தன்னைப் புணர்ந்தாலும்**
**புலவாதொழிதல் கயற் கண்ணாய்**
**மங்கை மாதர் பெருங் கற்பென்று**
**அறிந்தேன் வாழி காவேரி.”**

என்னும் கோவலன் ஆற்றுவரிப் பாடலில் அடி மடக்கி வந்து அதன் வாய்மொழிப் பண்பைக் காட்டுகிறது.

**“பொன்னிலங்கு பூங்கொடி! பொலஞ்செய் கோதை வில்லிட**
**மின்னிலங்கு மேகலைகள் ஆர்ப்ப ஆர்ப்ப எங்கணும்**
**தென்னன் வாழ்க வாழ்க என்று சென்று பந்தடித்துமே**
**தேவர் ஆர மார்பன் வாழ்க என்று பந்தடித்துமே”**



FUTURE VISION

இக் கந்துகவரிப் பாடலில் பந்தடிக்கும் ஓசை மிளிரக் காணலாம். நாட்டுப்புறப் பாடல்களில் தம் உள்ளத்தைப் பறிகொடுத்தவர் இளங்கோவடிகள் என்பதற்கு ஒரு சான்று நாடுகாண் காதையில் இடம் பெறுகிறது. காவிரியாற்றங்கரையில் உழவர்கள் ஆரவாரத்தைக் கேளுங்கள்:

**"கருங்கை வினைஞரும் களமரும் கூடி**
**ஒருங்குநின்றார்க்கும் ஒலியே அன்றியும்...**
**செங்கயல் நெடுங்கண் சில்மொழிக் கடைசியர்**
**வெங்கள் தொலைச்சிய விருந்தின் பாணியும்**
**பார் உடைப்பனர் போல் பழிச்சினர் கைதொழ**
**ஏரொடு நின்றோர் ஏர்மங்கலமும்**
**அரிந்துகால் குவிந்தோர் அரிகடாவுறுத்த**
**பெருஞ்செய்ந் நெல்லின் முகவைப் பாட்டும்**
**தெண்கிணைப் பொருநர் செருக்குடன் எடுத்த**
**மண்கனை முழவின் மகிழிசை ஓசையும்"**

ஆகியவற்றைக் காவிரியாற்றங்கரையில் கேட்டக் கொண்டே நடந்தார்களாம் கண்ணகியும் கோவலனும் கவுந்தியடிகளும்! அவர்கள் அப் பாட்டுக்களைக் கேட்டுக் கொண்டே சென்றதனாலதான் 'ஆர்வ நெஞ்சமோடு அவலங் கொள்ளாராய்ச்' சென்றனராம் இங்ஙனம் குறிப்பிடும் இளங்கோவடிகள் பேரவலம் நிறைந்த கதை என்பதனால்தான் போலும் இத்தனை நாட்டுப்புறப் பாடல்களுக்கு இலக்கிய வடிவம் தந்து, இடையிடையே மிடைந்து தந்துள்ளார்.

தமிழிலக்கியவுலகில் நாட்டுபுறப் பாடல்களுக்கு மிகச் சிறந்த இலக்கிய வடிவங்களைத் தந்து நம உள்ளங் கவர்ந்தவர்கள் இளங்கோவடிகள், மாணிக்கவாசகர் தாயுமானவர், வள்ளலார், பாரதியார்,ஆவர். குயில் பாட்டில் பாரதியார் இவ்வார்வத்தை வெளியிடும் இடம் ஒன்றுண்டு.

**"மானுடப் பெண்கள் வளருமொரு காதலினால்**
**ஊனுருகப் பாடுவதில் ஊறிடுந்தேன் வாரியிலும்**
**ஏற்றநீர்ப் பாட்டின் இசையினிலும் நெல்லிடிக்கும்**
**கோற்றொடியார் குக்குவெனக் கொஞ்சும் ஒலியினிலும்**
**சுண்ண மிடிப்பார்தம் சுவைமிகுந்த பண்களிலும்**
**பண்ணைமடவார் பழகுபல பாட்டினிலும்**
**வட்டமிட்டுப் பெண்கள் வளைக்கரங்கள் தாமொலிக்கக்**
**கொட்டி இசைத்திடுமோர் கூட்டமுதப் பாட்டினிலும்**
**வேயின் குழலோடு வீணைமுதலா மனிதர்**
**வாயினிலும் கையாலும் வாசிக்கும் பல்கருவி**
**நாட்டினிலும் காட்டினிலும் நாளெல்லாம் நன்றொலிக்கும்**
**பாட்னிலும் நெஞ்சை பறிகொடுத்தேன் பாவியேன்"**

'நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம் என்றோர் மணிஆரம்' என்று பாரதியார் குறிப்பிடுவதன் உண்மையும் இதனாற் புலனாகும்.

தொன்மைக் காலத்து நாடகப் பண்புகள் கூத்து வகைகளிலிருந்து கிளைத்தவை. ஒருவரே கதை கூறி நடித்துக் காட்டுவன: ஒரு சிலர் உரையாடியும் ஆடியும் பாடியும் உணர்த்துவன: பாத்திரங்களாக வேடமிட்டு வந்து போவன: இடையிடையே ஆசிரியனே வந்து கதை கூறுவன என இவ்வாறமைந்த திறம் பலவும் சிலம்பிலுண்டு. நாடக அங்கதம் என்பதும் மேலைநாட்டு நாடகவுத்தி அவல நாடகங்களுக்கு அது மிக இன்றியமையாதது. சிலப்பின் தொடக்கத்திலேயே 'காதற் பிரியாமல் கவவுக்கை ஞெகிழாமல் தீதறுக' என்று பெண்கள் கூடி, ஆடிப்பாடி வாழ்த்தும் போது, ஏனிந்த மங்கலமற்ற சொற்கள் என நம் நெஞ்சம் துணுக்குறுகிறது. முன்னுணர்த்துதல் என்பதும் நாடகவுத்தியே. கோவலன் கண்ணகி இருவரும் மதுரைக்குள் புகும்போதே கருநெடுங்குவளையும் ஆம்பலும் கமலமும் கண்ணீர் சிந்திக்காலுற நடுங்குகின்றன! போருளைந்து எடுத்த ஆரெயில் நெடுங்கொடி வாரல் என்பது போல மறித்துக் கை காட்டுகிறது. கண்ணகி கருங்கணும், மாதவி செங்கணும் நீருகுத்து எண்ணுமுறை இடத்தினும் வலத்தினும் துடிக்கும்போது, வரப்போவது என்னவோ என்று நம் நெஞ்சில் ஆர்வநிலை(Suspense) எழுகிறது. அடைக்கலக் காதையில் மாடலன் கோவலனின் இளமைக்கால நிகழ்சிகளை நினைவு கூர்கின்றான். இது பின்னோக்கு உத்தியின் பாற்படும். இன்பமும் துன்பமும் கலந்து வருவதும் நகையும் அவலமும் மாறிமாறி வருதுவமான முரண் சுவையே சிறந்த நாடகக் கூறு. அவலத்தில் முடியும் சிலம்பு மங்கல வாழ்த்தாகத் திருமண மகிழ்சியில் தொடங்குகிறது. அடைக்கலக் காதைக்கு அடுத்துக் கொலைக் கள காதை, நாடுகாண் காதைக்கு அடுத்து காடு காண் காதை என இவற்றை எண்ணிப் பார்த்தால் உண்மை விளங்கும். அந்திமாலைச் சிறப்புச் செய் காதையில் மாலையும் காலையும் கூடுவோரும் பிரிந்தோரும் மகிழ்ச்சியும் அழுகையும் மாதவியும் கண்ணகியும் என அதில் அமைந்துள்ள முரண் அமை பாங்குகள் எண்ணியெண்ணி மகிழ்தற்குரியன. நாடகப் பண்புகளின் களஞ்சியமே சிலம்பு எனலாம்.



FUTURE VISION

இங்ஙனம் எண்ணிப்பார்த்தால் சிலம்பின் ஒவ்வொரு சிறப்பும் நம்மை ஒவ்வொரு வகையாகச் சிந்திக்க வைக்கும். அதில் மூன்று நாடுகளாகத் திகழ்ந்த தமிழக நிலப்பரப்பைக் காணலாம். மூன்று தலைநகரங்களை அறிமுகப்படுத்திக் கொள்ளலாம்; மூவேந்தர் பெருமையை உணரலாம்; மூன்று நாட்டிலும் வாழ்ந்த சமுதாய மக்களைப் பற்றிக் கோடிட்டு அறிந்து கொள்ளலாம்.

தமிழரின் தேசிய காப்பியம், வரலாற்றுக் காப்பியம், சமுதாயக் காப்பியம் என்ற பெயர்கள் பலவும் அதற்குப் பொருந்தி வருவனவே.

சங்ககால நெடும் பாடல்களாகிய பத்துப்பாட்டின் சாயலை நாம் சிலம்பில் காண்கிறோம். தலைவன் தலைவி வருணனை, நில வருணனை, ஆற்று வருணனை, பாடினி வருணனை என்பனவெல்லாம் மரபு வழி வந்த பண்புகளாகும். எயினர்களை அறலை கள்வராக மட்டும் காட்டவே அகப்பாடல் இடம் தந்தது. அவர்களின் கொற்றவை வழிபாட்டைக் காட்டச் சிலம்பில் வாய்ப்பேற்றபட்டது. ஆயர்களின் ஆனிரை மேய்த்தலைச் சுட்டவே அகப்பாடலில் மரபு இடம் தந்தது. கலித்தொகை மட்டும் அவர்களின் ஏறுதழுவுதலையும் உணர்த்த முற்பட்டது. சிலம்பிலோ அவர்களின் அன்றாட வாழ்வு முறை, வழிபாடுகளைக் காண்கிறோம். பெரும்பாணாற்றுப் படையில் வரும் ஆயர்முதுமகள் பற்றிய செய்தியை மாதரியுடன் ஒப்பிட்டுக் காணலாம். பிற்காலத் தமிழ்க் காப்பியங்கள் சொல் வளமும் இலக்கிய பல்வளமும் வாய்த்துத் திகழ்வதற்கு இம் முன்னோடியான முதற் காப்பியமே அடித்தளம் அமைத்தது.

**மணிமேகலை**

காப்பியத் தலைவி பெயரால் இது 'மணிமேகலை' என்றும், 'மணிமேகலை துறவு' என்றும் அழைக்கப்பட்டது. சிலம்பு போலவே முப்பது காதைகளையுடைய தாயினும், வரிப்பாடல்கள், குரவைப் பாடல்கள் போல்வன இடைவிரவிவராமல் இது வேறுபட்டுள்ளது. சிலப்பதிகாரம் சமய வேறுபாடு காட்டாமல் அமைந்திருக்க, பௌத்த சமய உண்மைகளையே சார்ந்து தோன்றியுள்ள மணிமேகலை, தமிழில் தோன்றிய முதற் சமயக் காப்பியமாக அமைந்துள்ளது என்ற கருத்துண்டு. மணிமேகலையாகிய காப்பியத் தலைவி பௌத்த சமயத்தை அழுந்தப் பற்றிப் புறச் சமயத்தாருடன் வாதிட்டவளாதலின் அவள் கதையைக் கூறும் சாத்தனார் அச்சமய உண்மைகளைப் பாடாது தவிர்த்தல் இயலுமா? எனவே வைதிகம் சமணம் பௌத்தம் போன்ற பல்வேறு சமயங்களை மதுரைகாஞ்சி போன்ற சங்க நூல்களிற் காணும் நாம், அவற்றின் நிலை பற்றிய விரிவான விளக்கங்களைக் கதை தழுவிய காப்பியங்களிற் காண்கிறோம்

இந்நூலாசிரியர் மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார் ஆவர். இளங்கோ கூறும் தண்டமிழாசான் சாத்தனாரும் இவரும் ஒருவரே காலத்தவர் என்பதுதான் பலரது கருத்தாகும்.

**"இளங்கோ வேந்தன் அருளிக் கேட்ப**
**வளங்கெழு கூல வாணிகன் சாத்தன்**
**மாவண் தமிழ்த்திறம் மணிமேகலை துறவு**
**ஆறைம் பாட்டினுள் அறிய வைத்தனென்"**

என்பது மணிமேகலைப் பதிகம்.

மணிமேகலை 'விழாவறை காதையில்' தொடங்குகிறது. காவிரிப்பூம்பட்டினத்தில் இருபத்தெட்டு நாள் நடைபெறும் இந்திரவிழா பற்றி அது விரித்துக் கூறுகிறது.

**"பசியும் பிணியும் பகையும் நீங்கி**
**வசியும் வளனும் சுரக்கென வாழ்த்தி"**

விழா தொடங்குகிறது. இறுதியில் 'பவத்திறம் அறுகெனப் பாவை நோற்ற காதையில்' கதை முடிகிறது.

இந்திரா விழாவில் நாட்டியமாடுவதற்கு மாதவியும் வரவில்லை. மணிமேகலையும் வரவில்லை. அதனால் ஊரார் பழி தூற்றுவதாக மாதவியின் தாய் சித்திரபதி வயந்த மாலையிடம் கூறியனுப்புகிறாள். அதற்கு மாதவி,

**"மாபெரும் பத்தினி மகள் மணிமேகலை**
**அருந்தவப் படுத்தல் அல்லது யாவதும்**
**திருந்தாச் செய்கைத் தீத்தொழிற் படாஅள்"**

என்று விடை கூறக் காண்கிறோம்


FUTURE VISION

மணிமேகலை தன் பெற்றோர் உற்ற துயரைக் கேட்ட அளவில் கண்ணீர் சிந்த அதனால் அவள் புத்தபகவானுக்குத் தொடுத்த மாலை தூய்மை இழந்தது. புதிய மாலை தொடுக்க மணிமேகலை சுதமதியுடன் உவவனம் சென்றாள். மணிமேகலையின் அழகை வியந்த ஊரார்' இவனை அருந்தவப் படுத்திய தாய் கொடியவள்' எனத் தூற்றினர். அவள் மீது அன்பு கொண்டிருந்த உதய குமாரன், தேரேறி அவளைத் தொடரலாயினான். புத்த பீடிகை உள்ள பளிக்கறையின் மணிமேகலை உட்புகுந்து தன்னைக் காப்பாற்றிக் கொண்டாள். எவ்வாறேனும் அவளை அடைவதென உறுதிபூண்டு நின்ற சோழன் மகன் உதயகுமரனிடம் சுதமதி அறிவுரை கூறி அனுப்பினாள்.

மணிமேகலா தெய்வம் சக்கரவாளக் கோட்டத்தில் படுத்துறங்கிய மணிமேகலையை மணிபல்லத்தீவிற்குத் தூக்கிச் சென்று அங்கு வைத்துவிட்டுப் போயிற்று. துயிலெழுந்த மணிமேகலை சுதமதியைக் காணாது அரற்றினாள். அப்போது புத்தபீடிகை தோன்றவே அதனை வணங்கிய மணிமேகலைக்குப் பழம்பிறப்பு உணர்ச்சி ஏற்பட்டது. பிறகு மணிமேகலா தெய்வம் அவள்முன் தோன்றி 'நீயும் உதயகுமாரனும் பழம்பிறப்பில் கணவன் மனைவியராக விளங்கியவர்கள். அதனால் உன் மனமும் அவன்பாற் சென்றது. இதனையறிந்து யான் உன்னைத் தனிமைப்படுத்தவெ இங்கு தூக்கி வந்தேன்' என்று கூறியது. பிறகு வேற்றுரு எடுக்கவும் வான் வழியாகச் செல்லவும், பசியை அடக்கவும் வல்ல மூன்று மந்திரங்களை நல்கிச் சென்றது அத்தெய்வம்.

பின்னர் அத்தரும பீடிகையைக் காக்கும் தீவதிலகை தோன்றி ஆபுத்திரன் கையிலிருந்ததும் அள்ள அள்ளக் குறையாததுமான அமுதசுரபி என்னும் அட்சய பாத்திரம் அன்றே மணிமேகலை கையிற் கிடைக்கும் எனக் கூறினாள். அது போல அதனைப் பெற்ற மணிமேகலை அறவணடிகளிடம் அறிவுரை பெற்றாள். ஆதிரை என்னும் கற்புக்கரசியிடம் முதன் முதலில் பிச்சை பெற்றுப் பிறகு காணார், கேளார், கான்முடப் பட்டோர் முதலிய ஏழைகள் அனைவருக்கும் பசிப்பிணி தீர்த்தாள்.

உலகவறவியில் உணவூட்டிப் பணி செய்து கொண்டிருந்த மணிமேகலையைச் சித்திராபதியின் தூண்டுகோலால் தேடிச் சென்ற உதயகுமாரன், அவளுக்கு இன்னல்கள் விளைவிக்க எண்ணினான். இதனை உய்த்துணர்ந்த மணிமேகலை விரைவில் காயசண்டிகை வடிவெடுத்துப் பணி செய்யலானாள். சிறைச்சாலையில் உள்ள குற்றவாளிகட்கு உணவூட்டி அதனை அறச்சாலையாக மாற்றினாள். இதனை அறிந்த காவலர்கள் அவளைச் சோழனிடம் அழைத்துச் சென்றபோது இவள் அம்மன்னனிடம் சிறைச்சாலையை அறச்சாலையாக மாற்றும்படி கேட்டக் கொண்டாள். மன்னனும் அவ்வாறே செய்தான்.

காயசண்டிகையின் யானைப் பசியைத் தீர்த்த மணிமேகலை அவள் வடிவிலேயெ உலகவறவியில் நடமாடினாள். ஆண்டுகொரு முறை அங்கு வரும் அவள் கணவன் விஞ்சையன், மணிமேகலையை உருமாறிய நிலையில் தன் மனைவி என்றே எண்ணி அவளை நாடிவந்த உதயகுமாரனை வாளால் எறிந்து கொன்று விட்டான். பின்னர்க் கந்திற் பாவையின் அறிவுரையால் அவன் அவ்விடம் விட்டகன்றனன்.

பின்னர் உதயகுமாரன் கொலையுண்டது தொடர்பாக மணிமேகலை சிறைப்படுத்தப்பட்டாள். சோழமாதேவி மணிமேகலைக்குச் சொல்லவொண்ணாத் துன்பங்களைச் செய்து வாட்டினாள். அவற்றால் எல்லாம் வாடாதிருந்த மணிமேகலையைக் கண்டு அம்மன்னன் மனைவி அறிவு பெற்றாள். பின்னர் மணிமேகலை ஆபுத்திரனாடு அடைந்து அவனைக் கண்டு அவனுடன் மணி பல்லவம் புகுந்து அங்கிருந்து வஞ்சிமாநகர் சென்றாள். அங்கே கண்ணகி கோவலன் படிமங்களைக் கண்டு அழுதாள். மாதவன் வடிவுபூண்டு அவள் அங்கே சைவம், அளவை, பிரமம், வைணவம், வேதம், ஆசீவகம், சமணம், சாங்கியம், வைசேடிகம், பூதம் முதலாய நெறிகளின் கோட்பாடுகளை அவரவர் வாய்க் கேட்டறிந்தாள். பிறகு காஞ்சி மாநகர் மழையின்றி வாடுவதைக் கேள்விப்பட்டு வான் வழியாகக் காஞ்சிக்குச் சென்றாள். அங்குத் தாயாரையும் அறவணவடிகளையும் கண்ட பின் தன் ஆண் வேடத்தை அவள் அகற்றினாள். அறவணவடிகளிடம் அவள் தவத்திறம் பூண்டு தருமம் கேட்டாள். அதனால் அவள் அக்காஞ்சியிலேயே பவத்திறம் அறுகென நொறப்பவள் ஆயினாள்.

**சிறப்பியல்புகள்**

மணிமேகலையைப் பற்றி முனைவர் வ.சு.ப.மா. குறிப்பிடும்பொழுது, 'பரத்தையொழிப்போடு மது ஒழிப்பு சிறையொழிப்பு, சாதியொழிப்பு என்றினைய சமுதாயச் சீர்திருத்தங்களின் களஞ்சியம் இக்காவியம்' என்பார். விலம்பு போலக் சுவை மிகுமாறு எழுத வாய்ப்பின்மையின் பல கிளைக்கதைகளையும் அழகிய வருணனைகளையும் நடையொளிமையையும் காட்டி மனத்தை ஈர்க்கப் பார்க்கின்றார் சாத்தனார்.

புத்தமதக் கருத்துக்களை அழகிய தமிழில் மொழி பெயர்த்துத் தரும் இப்பெருங்காப்பியத்தில் வடமொழி பாலிமொழிச் சொற்கள் மிகுதியாகக் கலந்து வந்துள்ளன. முனைவர் உவே.சா அவர்கள் சமய சம்பந்தமான சில சொற்களையும் தொடர்களையும் வேறு சிலவற்றையும் இடத்திற்கேற்ப இவர் மொழிபெயர்த்து அதைமத்திருத்தல் மிகப் பாராட்ற்கு உரியதொன்றாம் என்று குறிப்பிட்டள்ளமை கொண்டும் இதை அறியலாம்.

இதன் கண் சிறந்த அனுபவ உரைகளையும் அறிவுரைகளையும் காணலாம். மணிமேகலை தன்மனம் தன்னையும் அறியாமல் உதயகுமாரனிடம் செல்லக்கண்டு கீழ்வருமாறு வருந்தியுரைக்கிறாள்.

FUTURE VISION

**"கற்புத் தானிரள் நற்றவ உணர்விலள்**
**வருணக் காப்பிலள் பொருள்விலை யாட்டிஎன்று**
**இகழ்ந்தன னாகி நயந்தோன் என்னாது**
**புதுவோன் பின்றைப் போனதென் நெஞ்சம்**
**இதுவோ அன்னாய் காமத் தியற்கை"**

உலகியல் யாரையும் வழுப்பட முயலும் என்பதற்கு இ∴தோர் எடுத்துக்காட்டு

பசிப்பிணியின் கொடுமையையும் அதைத் தீர்ப்பதன் தன்மையையும் எடுத்துரைக்கும் இடங்களை இந்நூலிற் போல வேறு எந்நூலிலும் காண்டலரிது.

**"பசிப்பிணி என்னும் பாவியது தீர்த்தோர்**
**இசைச்சொல் அளவைக்க என்நா நிமிராது**
**"மண்திணி ஞாலத்து வாழ்வோர்க் கெல்லாம்**
**ஊண்டி கொடுத்தோர் உயிர்கொடுத் தோரே"**
**"மக்கள் தேவர் எனஇரு சார்க்கும்**
**ஓத்த முடிவின் ஓரறம் உரைக்கேன்**
**பசிப்பிணி தீர்த்தல் என்றெ அவரும்**
**தவப்பெரும் நல்லறம் சாற்றினர்…"**
**"அறமெனப் படுவது யாதெனக் கேட்பின்**
**மறவா திதுகேள் மன்னுயிர்க் கெல்லாம்**
**உண்டியும் உடையும் உறையுளும் அல்லது கண்டதில்"**

இவ்வாறு மணிமேகலை முழுவதும் பொதுளிக் கிடக்கும் செய்தி இதுவாகும். இத்தகையதொரு சிறந்த சமுதாய அறநூல் அதன் சமயச் சார்பு கருதிப் போலும் பலராலும் போற்றிக் கற்கப்படாது போயிற்று. காமங் கொண்டு மணிமேகலையைப் பின் தொடர்ந்த உதயகுமாரனுக்குச் சுதமதி அறிவுரை கூறி, இவ்வுடம்பின் இழிவைச் சுட்டுமிடம் சிந்தனையத் தூண்டுவதாகும்.

**"யான் ஒன்று கிளப்பல்:**
**வினைவிளங்கு தடக்கை விறலோய்! கேட்டி!**
**வினையின் வந்தது வினைக்குவிளை வாயது**
**புனைவன நீங்கல் புலால்புறத் திடுவது**
**மூப்புவிளி புடையது தீப்பிணி இருக்கை**
**பற்றின் பற்றிடம் குற்றக் கொள்கலம்**
**புற்றடங் கரவிற் செற்றச் சேர்கை**
**அவலக் கவலை கையா றழுங்கல்**
**தவலா உள்ளம் தன்பா லுடையது**
**மக்கள் யாக்கை"**

அருவருப்பு என்னும் சுவையைத் தோற்றுவித்து, உடம்பின் இழிதகவை இவ்வடிகள் நன்கு புலப்படுத்துகின்றன.

இந்நூலில் உவவன வருணனை புகார் நகர வருணனை, அந்திப்பொழுதின் வருணனை எனப் பல வருணனைகளும், அழகிய உவமைகளும் இடம்பெற்றுக் காப்பிய நலனைச் சிறக்கச் செய்கின்றன. தொழுது காட்டும் சுதமதி தன்னுடன் மணிமேகலை மலர் கொய்யப் புகுந்த உவவனம் சித்திரப் படாம் போர்த்தது போல இருந்ததாகப் புனையும்திறம் அழகிது.

**இரட்டைக் காப்பியம்**

சிலம்பும், மணிமேகலையும் இரட்டைக் காப்பியங்கள் எனப்படும். கண்ணகி, மாதவி, கோவலன் கதையைச் சிலம்பு கூறும். கோவலன் மாதவி இருவரின் மகளான மணிமேகலை கதையை மேகலை கூறும் 'மணிமேகலை மேல் உரைப்பொருள் முற்றிய சிலப்பதிகாரம் முற்றும்' என்பது சிலம்பின் இறுதிக் கட்டுரை வாக்கியமாகும். இரண்டு பதிகங்களும் இளங்கோவும் சாத்தனாரும் ஒருவர் கேட்க ஒருவர் நூலரங்கேற்றயமையை விளக்குகின்றன முனைவர் வ. சுப.மா. தம் 'இரட்டைக் காப்பியங்கள்' என்ற நூலில் இவ்விரண்டினிடையே காணப்படும் சொல்சொப்பு தொடரொப்பு, இலக்கண ஒப்புமைகளைச் செவ்விதின் எடுத்துக் காட்டியுள்ளார்.



FUTURE VISION

சிலர் இவை இரட்டைக் காப்பியங்கள் அல்ல எனவும் மணிமேகலை பிற்பட்ட காலத்து எனவும் சாதிப்பர். சிலம்பு சமயம் சாராதது. மேகலை ஒரு சமயம் சார்ந்தது. இரண்டிலும் காணப்படும் பதிகங்களும் பொய்யானவை என்பர். மேகலையில் 'குச்சரக் குடிகை' என்ற சொல்லாட்சி வருகிறது. இது வடநாட்டுக் கூர்ச்சரத்தைக் குறிப்பதாகக் கொண்டு அதன் காலம் 6ம் நூற்றாண்டு ஆதலால் மணிமேகலையின் காலம் அதற்குப் பிற்பட்டதென்பர். குச்சரக் குடிகை என்றால் சிறிய கோட்டம் என்பது பொருள். குச்சு என்பது இன்றும் உலக வழக்கில் சிறிய குடிசையைக் குறித்தல் காண்க.

மேகலை குறிக்கும் 'மகாயான புத்த சமயம்', காலத்தால் முற்பட்டது என்பர், முனைவர் மா.இராமாணிக்கனார். பிற பல வலுவான சான்றுகளிருக்கவும் ஓரிரு சொற்களைக் கருதியோ, சமயச்சார்பு கருதியோ மணிமேகலையைப் பிற்காலத்து எனக்கூறுதல் பொருத்தமன்று.

**பெருங்கதை**

**இ∴து** அகவற்பாவாலான காப்பியம், தமிழில் முதற் காப்பியங்கள் மூன்றும் அகவல் யாப்பால் அமைந்துள்ளமை கருதற்பாலது. பத்துப்பாட்டுப் போல், இவை கதை தழுவி அமைந்துள்ளமை இவற்றின் இயல்பான வளர்ச்சியை உணர்ததும். குணாட்டியர் என்பவர் பைசாச மொழியில் எழுதிய கோசம்பி நகர மன்னன் உதயணன் கதை இது. 'பிருகத் கதா எனப்படும் இதனைப் பெருங்கதை என யாத்தனர் கொங்குவெள் என்னும் அரசத் தமிழ்ப்புலவர். அதனால் இந்நூற்குக் கொங்குவேள் மாக்கதை எனவும் பெயருண்டு. கி.பி 6வது நூற்றாண்டில் கங்கை நாட்டை ஆண்ட துர்விநீதன் வடமொழியில் பெயர்த்த நூலின் விழிப்பட்டதே இத்தமிழாக்கம் என்பர் ஆய்வாளர் அதனால் இதன் காலம் கி.பி. ஏழாம் நூற்றாண்டு எனக் கூறுவர் கா. சுப்பிரமணிய பிள்ளை.

இதனை முதல் சமணக் காப்பியம் எனலாம். கொங்கு வேளின் ஊர் விசயமங்கலம் என்பர். இந்நூல் நடைநலத்தாலும் புனைவு முறையாலும் அக்கால மக்களின் பழக்க வழக்கம் பண்பாடுகளைக் கூறும் முறையாலும் ஏனைய காப்பியங்கள் போல் மிகுந்த சிறப்புடையதாகும்.

உதயணன் மலையின் பக்கத்தே பிறந்து யூகி என்ற நண்பனுடன் வளர்ந்து தந்தை அரசையும் மாமன் அரசையும் தன் முயற்சியால் பெறுகிறான். இவன் யானையைத் தன்வயப்படுத்தும் ஆற்றலுடையவன்: யாழிசை வல்லவன். உச்சயினி நகர மன்னனால் சிறைப்படுத்தப்பட்டு யூகியால் விடுவிக்கப் பெறுகிறான். ஊச்சயினி மன்னனது பட்டத்து யானை அடக்கி அம்மன்னன் மகள் வாசவதத்தையை மணக்கிறான். பிறகு அவ்வின்பத்திலேயே தேங்கிக் கிடந்த உதயணனை யூகி தன் மதிவன்மையால் சூழ்ச்சி செய்து மீட்கிறான். பின்னர்ப் பதுமாவதியையும் மற்றும் இருவரையும் உதயணன் மணக்கின்றான். வாசவத்தையின் மகன் நரவாணதத்தன்மதன மங்கையை மணக்கின்றான். அவளை வித்தியாதரன் ஒருவன் கைப்பற்றிச் செல்ல, உதயணன் வித்தியாதர உலகம் சென்று அங்குள்ள அரசர்களை வென்று வித்தியாதரப் பெருமன்னனாய் வாழ்கிறான். இறுதியில் பதுமாவதியின் மகனுக்கு அரசாட்சியை அளித்து விட்டு உதயணன் தவம் செய்யச் செல்கிறான்.

இதில் சிந்தாமணிக் காப்பியத்தின் வளர்ச்சிக்கான கூறுகளைக் காணலாம். இந்நூலுள் ஊழின்வலி, நட்பினர் கடமை, அரசாட்சி முறை நீத்தார் பெருமை, சமணசமக் கொள்கை ஆகியன விளக்கப்படுகின்றன. "அந்நாளைய நாகரிக வாழ்வின் சிறப்பெலாம் வகையெலாம் இந்நூலில் விளங்குவது போல் வேறு எந்தத்தமிழ் நூலிலும் விளங்குவதில்லை" என்று முனைவர் தெ.பொ.மீ. கூறுகிறார்.

இந்நூல் இப்போது முதலும் முடிவும் இல்லாமலும் இடைப்பட்ட சில பகுதிகளின்றியும் கிடைத்துள்ளது. இதில் இலக்கியத் திட்ப நுட்பங்கள் பல செறிந்திருந்தும் கற்றறிந்தவர்களால் இது போதிய அளவு போற்றப் படாமை வியப்பைத் தருகிறது.

**முதல் ஐந்து காப்பியங்கள்**

சிலப்பதிகாரம் மணிமேகலை, பெருங்கதை ஆகியன முதல் மூன்று தமிழ்க் காப்பியங்கள் எனக் கண்டோம். இவற்றுடன் காலத்தால் முற்பட்ட சீவகசிந்தாமணி சூளாமணி இரண்டையும் சேர்த்து முதல் ஐந்து காப்பியங்கள் என்று சிறப்பிக்கும் முறையை அறிஞர் மு. அருணாசலம் புலவர் சோம. இளவரசு, முனைவர் மா. சண்பகம் ஆகியோர் நூல்களில் காணலாம்.

**சீவக சிந்தாமணி**

**சோழ மரபினராய்ச்** சமணசமயத் துயவியாய்த் திகழ்ந்த திருத்தக்க தேவரால் இக் காப்பியம் படைக்கப் பட்டது. விருத்தம் எனும் பாவிலான் முதல் தமிழ்க் காப்பியம் என்று இது போற்றப்படுகிறது. முன்னர் எழுந்த காப்பியங்கள் அகவற் பாவாலமைந்தவை. அவற்றுள் சிலம்பில் காணப்படும் வரிப்பாடல்களில் விருத்தப் பாக்களுக்கான தோற்றுவாய்கள் உள. பத்தி இலக்கியப்



FUTURE VISION

பெரியோர்கள்விருத்தங்களை இசைத்தனர். ஒருபொருள் மேல் பத்தடுக்கிப் பதிகங்கள் பாடினர். அவற்றைப் பின்பற்றிக் கதை தழுவிய காப்பியமாக ஆக்கிய பெருமை திருத்தக்க தேவருடையது. அவருக்குப் பின்பு சேக்கிழாரும் கம்பரும் கச்சியப்பரும் இவ்வியாப்பினை எடுத்தாளுதற்கு இவரே முன்னோடியாவார். இந்நூல் பதின்மூன்று இலம்பங்களையும் மூவாயிரத்திற்கு மேற்பட்ட செய்யுள்களையும் உடையது. நாமகளிலம்பகம் தொடங்கி முத்தியிலம்பகம் ஈறாகப் பதின்மூன்று இலம்பங்களும் மணவினைபற்றிக் கூறுகின்றன. சீவகன் கல்வி கற்றதைக் கூறுவது நாமகள் இலம்பகம். கட்டியங்காரனை வென்று நாட்டை அடைந்தது மண்மகள் இலம்பகம்.சீவகன் ஆட்சி எய்தியது பூமகள் இலம்பகம், வீடுபேறுறக் காதலித்தது முத்தியிலம்பகம். பிற எட்டு இலம்பகங்கள் முறையே சீவகன் காந்தருவத்தை குணமாலை பதுமை கேமசரி கனகமாலை, விமலை, சுரமஞ்சரி, மாமன்மகள் இலக்கணை ஆகிய எண்மரை மணந்ததைக் கூறுவனவாம். நண்பன் பதுமுகனுக்கு நந்தகோபன் மகள் கோவிந்தையை மணம் முடித்து வைத்தது கோவிந்தையாரிலம்பகம். இங்ஙனம் மணமாக உருவகித்தும் மணவினை பற்றியுமே கூறுவதால் இதற்கு மணநூல் என்ற பெயரும் உண்டு.

இன்பச்சுவை தழுவிய ஒரு சமணத் துறவி பாடிவிட்டார் என்ற அவச் சொல்லை நிக்குவாதற்காக முற்றிலும் நிலையாமை கருதிய நரிவிருத்தம் என்ற நூலை ஆசிரியர் பாடினார் என்பர். சிந்தாமணிக்கு நச்சினார்க்கினியர் உரைமுழுமையாகக் கிடைப்பது ஒரு சிறப்பென்றே கூற வேண்டும். கம்பர் சிந்தாமணியில் ஓர் அகப்பை முகந்த கொண்டேன்" என்று கூறியதாகச் செவிவழிக் கதை ஒன்று உண்டு. மேனாட்டுத் தழிழறிஞர் ஜி.யு.போப்பையர் திருத்தக்க தேவரைத் தமிழ்க் கவிஞருள் அரசர் என்றும் சிந்தாமணியைக் கிரேக்கக் காப்பியங்களுக்கு இணையானது என்றும் புகழ்கிறார்.

ஏமாங்கத நாட்டுச் சச்சந்தன் மனைவி விசையை மீது கழிபெருங்காதல் கொண்டு, அரசாட்சியைக் கட்டியங்காரன் என்ற அமைச்சனிடம் ஒப்படைத்தான். அவன் சூழ்ச்சி செய்து, அரசனைப் புறஞ்சூழ்ந்து போரிட்டுக் கொன்றுவிட முயல்கையில் ஒரு மயில் பொறியில் கருவுற்றிருந்த தன் மனைவியை அனுப்பி விட்டுச் சச்சந்தன் போரில் மடிகின்றான். அவள் இடுகாட்டில் சீவகனைப் பெற்றுப் போட்டுவிட்டுத் தவம் செய்யச் சென்று விடுகிறாள். கந்துக்கடன் என்ற வணிகன் சீவகனை எடுத்து வளர்க்கின்றான். அச்சணந்தி என்பவரிடம் கல்வி பயின்ற சீவகன் தன் நன்பனுக்குக் கோவிந்தையை மணம் செய்வித்ததுடன் தானும் எண்மரைத்தன் பல்வேறு திறப்பாடு காரணமாக வென்று மணக்கிறான். நாட்டைக் கைப்பற்றி ஆட்சியையடைந்து வாழ்ந்தபின் இல்வாழ்வின் நிலையாமையை நினைத்து ஞானம் பெற்றுத் துறவு நிலையை அவன் அடைகின்றான்.

இந்நூல் கி.பி.ஒன்பதாம் நூற்றாண்டில் தோன்றிய தென்பர். கதை வடமொழியில் உள்ள சந்திர சூடாமணி, கத்திய சிந்தாமணி ஸ்ரீ புராணம் போன்ற நூல்களைத் தழுவியதென்பர். சைனமா புராணத்தின் பிற்பகுதியில் இக்கதைஉளதென்பதாலும் அந்நூலின் காலம் கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டின் இறுதியாதலாலும் தமிழ்ச் சிந்தாமணி பத்தாம் நூற்றாண்டின்தொடக்கம் என்பர் ஆய்வாளர். சிந்தாமணிப் பாயிரத்துள் வரும் பொய்யா மொழியை மைசூர்க் கங்க மன்னன் 'சத்தியவாக்கியன்' என்று கொண்டாலும் இந்நூலின் காலம் பத்தாம் நூற்றாண்டின் முற்பகுதியாகவே முடியும் என்று பேராசிரியர் கா.சு. பிள்ளை கருதுகிறார்.

வயல்களில் தலைசாய்த்து விளங்கும் நெற்கதிர்களைக் காட்டி நாட்டுவளம் பாடும் தேவர் உவமைகளை அடுக்கி ஒரு கற்பனையைப் படைக்கிறார். பாம்பின் தோற்றம் போல் நாற்று வளர்ந்து மேலல்லார் செல்வம் போல் தலை நிமிர்ந்து சில நாள் நின்று, கற்றறிந்த பெரியோர் போல தலை நிமிர்ந்து சில நெற்பயிர்கள் காய்ந்தன என்கிறார் தேவர்.

**"சொல்லரும் சூற்பசும் பாம்பின் தோற்றம் போல்**
**மெல்லவே கருவிருந்து ஈன்று மேலலார்**
**செல்வமே போல்தலை நிறுவித் தேர்ந்தநூற்**
**கல்விசேர் மாந்தரின் இறைஞ்சிக்காய்த்தவே"**
**(நாமகள்)**

**கல்வியின் சிறப்பை** பிறிதொரு பாடல் விளக்குகிறது.

**"கைப்பொருள் கொடத்தங் கற்றல்**
**கற்றபின் கண்ணு மாகும்**
**மெய்ப்பொருள் விளைக்கும் நெஞ்சின்**
**மெலிவிற்கோர் துணையு மாகும்**
**பொய்ப்பொருள் பிறகள் பொன்னாம்**
**புகழுமாம் துணைவி யாக்கும்**
**இப்பொருள் எய்தி நின்றீர்**
**இரங்குவ தென்னை என்றான்"**


FUTURE VISION

# MATERIAL தேவைக்கு

**TNPSC: GR –I & II (P), GR –IV**

**(TAMIL & ENGLISH MEDIUM),**

**PG: TRB - TAMIL, ENGLISH,**

**MATHS & COMPUTER SCIENCE**

**TET (P1 & P2),**

## CONTACT -90420 30163

*****************************************************

**FUTURE VISION STUDY CENTRE**

**2ND FLOOR, AVK MARUTHI PLAZA,**

**OPP. HOTEL LAKSHMI PRAKASH,**

**SKS HOSPITAL ROAD,**

**SALEM – 636 004**